

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் வருகின்ற 18.12.2025 அன்று கொளத்தூர், ஜி.கே.எம் காலனி, ஜம்புலிங்கம் பிரதான சாலையில், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.25.72 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பேறறிஞர் அண்ணா பெயரில் திறக்கப்படவுள்ள புதிய சமுதாய நலக் கூடத்தின் இறுதிக் கட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து நேற்று (09.12.2025) அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் சென்று ஆய்வு செய்து, அனைத்து பணிகளையும் விரைந்து முடித்து கண்காணித்திட தொடர்புடைய அலுவலர்களை அறிவுறுத்தினார். இதில் அரசு அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில்!

# அரியலூரில் 'கலைஞர் அறிவாலயம்' - அமைச்சர் கே.என்.நேரு அடிக்கல் நாட்டினார்!

## கழகத்தினர் 25,000க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு!

அரியலூர், டிச. 10 –

அரியலூர் மாவட்ட திமுக சார்பில் கலைஞர் அறிவாலயம் அடிக்கல் நாட்டு விழா மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சா ரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் நடைபெற்றது.

கழக முதன்மைச் செயலாளர்,மண்டல பொறுப்பாளர், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அடிக்கல் நாட்டி, கல்வெட்டையும் திறந்து வைத்து, பணியை துவக்கி வைத்தார்.

தற்பொழுது புதியதாக புறப்பட்ட ஒருவரை ஒரு சில ஊடகங்கள், ஒரு சில பத்திரிகைகள் வீட்டை விட்டே வெளியே வராதவர்களுக்கு நடந்தார், நிற்கிறார், போகிறார், வருகிறார் என விளம்பரப்படுத்துகின்றனர்.

கழக முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு கூடியிருந்த தொண்டர்கள் மத்தியில் உரையாற்றியபோது,

ஒவ்வொரு இடத்திலும் திமுகவுக்கு அலுவலகம் இருக்க வேண்டும் என நம் எல்லோர் மனதிலும் நீங்கா இடம்பெற்ற முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னதை நிறைவேற்றி வருகிறோம். 1996, 2001, 2006, 2011 இல் அப்போதைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சி செய்ததை போன்று தற்பொழுது நம் திராவிட மாடல் முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சி செய்துகொண்டு இருக்கிறார். அரியலூர் பெரம்பலூர் திருச்சி உள்ளிட்ட மாவட்டங்களுக்கு பல்வேறு சிறப்பு திட்டங்களை வழங்கிகொண்டு இருக்கிறார். உங்கள் மாவட்ட செயலாளர் , தமிழ்நாடு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அரியலூர் மாவட்ட அனைத்து தரப்பு மக்களையும் சந்தித்து நம் திராவிட மாடல் அரசின் சாதனைகளை ஒவ்வொரு ஊராக, கிளை கழகங்கள் தோறும் சென்று மக்களை சந்தித்து சொல்லவேண்டும் என்பதற்காக அனைத்து ஒன்றிய செயலாளர்களுக்கும் ஜீப் வழங்கி இருக்கிறார் அவரை நான் வாழ்த்துகிறேன் என்றார், சட்டப்பேரவையில் எந்தவித சமரசத்துக்கும் இடம் கொடுக்காமலும், எந்த உறுப்பினர் என்ன கேள்வி கேட்டாலும் அதற்கு சரியான பதிலை சொல்லக் கூடியவர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கண்ணசைவை பார்த்து அதனபடி திறம்பட செயல்பட கூடியவர் தான் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர். நம் முதல்வர் அருகில் பல மூத்த அமைச்சர்கள் இருக்கின்ற போதிலும் பல துறை சார்ந்த அமைப்பு ரீதியாகவும், ஒரு சில சமூகம் சார்ந்த பிரச்சினைகள் வரும் பொழுது அது சம்மந்தமாக கழகத் தலைவர் எஸ்.எஸ்.சிவசங்கரை தான் பேசச் சொல்வார்.

வீட்டை விட்டே வெளியே வராதவர்களுக்கு எல்லாம் பத்திரிக்கையாளர்கள் நடந்தார், நிற்கிறார், போகிறார், வருகிறார் என விளம்பரப்படுத்துகின்றனர். தமிழ்நாட்டு மக்களுக்கு இத்தனை திட்டங்களை தந்து கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை விட ஒரு நல்லாட்சியை அவர் தருவார் என்றா நம்புகின்றீர்கள்? நிச்சயம்

இதை யாரும் நம்ப மாட்டார்கள். 2026 ல் கழகம் தான் வெற்றி பெறும் அப்படி வெற்றி பெறுவதற்கு முதல் கூட்டமாக அரியலூர், பெரம்பலூர் மாவட்ட தொண்டர்கள் வந்திருப்பது ஒரு முன்னுதாரணம் ஆகும்.

நடைபெறுகின்ற நம் திராவிட மாடல் ஆட்சியில் பல திட்டங்களை செய்து தர இருக்கின்றது . ஒன்றிய அரசு நமது எந்த திட்டத்தையும் செயல்படுத்துவதற்கு எந்த நிதி ஒதுக்க மாட்டார்கள், நமக்கு தர வேண்டிய நிதியையும் தரவும் மாட்டார்கள் ஆனால் திட்டத்தை செயல்படுத்த விடாமல் தடுப்பதற்காக பல வழிகளில் நமக்கு இடைஞ்சல் செய்கிறார்கள். ஆனாலும் நம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எந்த திட்டத்தை யும் நிறுத்தாமல் தொடர்ந்து செயல்படுத்தி கொண்டு இருக்கிறார்.

வரும் 2026 சட்மன்ற தேர்தலில் அரியலூர் பெரம்பலூர் உள்ளடக்கிய 4 தொகுதிகளையும் வெற்றி பெற்றி பெற்று நம் முதலமைச்சரின் கரத்தை வலுப்படுத்துவோம் என தொண்டர்களிடம் அமைச்சர் கே.என்.நேரு உரையாற்றினார்.

அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசியதாவது:

கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் படி, கழக இளம் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் மரியாதைக்குரிய உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு,

அரியலூர் மாவட்ட கழகத்தின் நீண்டநாள் கனவான 'கலைஞர் அறிவாலயம்' அடிக்கல் நாட்டு விழா மிகுந்த எழுச்சியுடன் நடைபெற்றது.

கழகத்தின் வளர்ச்சிக்கான இந்த வரலாற்று நிகழ்வில், மாநில,மாவட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தொண்டர்கள் பெருந்திரளாகக் கலந்துகொண்டதற்கு முதலில் அனைவருக்கும் நன்றியை கூறிக்கொள்கிறேன் என்றார்.

தொடர்ந்து அமைச்சர் பேசிய போது

ஒருநபர் அமர்ந்துகொண்டு சொல்லும் செய்தியை சட்டப்பூர்வமாக்கி தமிழ்நாட்டையே பிளவுபடுத்தும் காட்சியெல்லாம் இன்று அரங்கேறுகிறது நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதனை மறைமுகமாக சாடினார்.

இந்திய அரசியலில் பாசிச ஆட்சி நடக்கின்ற சூழலில் அவர்களை எதிர்கொள்ள, அவர்களை எதிர்த்து நிற்கக் கூடிய ஒரே தலைவராக நமது தலைவர் , தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் திகழ்ந்து கொண்டிருக்கிறார்.

இந்தியாவிற்கே வழிகாட்டும் கொள்கை தலைவராக திகழ்கிறார்.

நம்முடைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

நமது தலைவர் செயல்படுத்துகின்ற நலத்திட்டங்களை மற்ற மாநிலங்களில் பின்பற்றுகின்றனர்.

தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னையில் பல்வேறு இடங்களில் நேரடியாக சென்று ஆய்வு செய்து மழைநீர் எங்கும் தேங்காமல் துரிதமாக செயல்பட்டு பணியை அரசு அதிகாரிகளுடன் நிறைவேற்றி வருகிறார்.

மாணவ, மாணவியர்களின் இடையே உள்ள விளையாட்டு வீரர்களை கண்டறிந்து அவர்களுக்கு நல்ல பயிற்சி கொடுத்து ஊக்குவித்து பல விளையாட்டு போட்டிகளில் இன்று தமிழ்நாடு பல பதக்கங்களை வென்று வருகிறது. நம் தமிழ்நாடு முதலமைச்சர் மாணவ, மாணவியர்கள், மாற்றுத்திறனாளிகள்,

திருநங்கைகள், பொதுமக்கள் என எதிர்கால முன்னேற்றத்திற்காக பல புதிய திட்டங்களை வழங்கி கோண்டு இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட முதலமைச்சர் மீண்டும் ஆட்சி பொறுப்பிற்கு வந்தால் தான் தமிழகத்தை காப்பாற்ற முடியும்,

மத அரசியல், வெறுப்பு அரசியல் நடத்துபவர்களை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு தமிழகம் என்றைக்கும் ஓரணியாக நிற்கின்றது என்பதை காட்ட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மீண்டும் வெற்றி பெற்று அரியணை ஏற அயராது உழைத்திட வேண்டும் என பேசினார்.

நடைபெற்ற கலைஞர் அறிவாலயம் அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சியில் அரியலூர் பெரம்பலூர் மாவட்ட ஒன்றிய,நகர, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், பொதுமக்கள் பலரும் சாரை சாரையாக அணிவகுத்து விழா நடைபெறும் இடத்திற்கு சுமார் 25,000 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வருகை தந்தனர்.

இந்நிகழ்ச்சியில் பெரம்பலூர் மாவட்ட பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், கழக சட்டத்திட்ட திருத்தகுழ இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் எம்.பி.பாலசுப்ரமணியன், வழக்கறிஞர் இராஜேந்திரன், மாநில ஆதிதிராவிடர் அணி துணை அமைப்பாளர் ப.துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணை அமைப்பாளர் பரமேஷ்குமார்,

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் து.அமரமூர்த்தி, ஒன்றிய கழக பொறுப்பாளர்,தனசேகர், பேரூர் கழக செயலாளர் ப.கோபாலகிருஷ்ணன், நகர கழக செயலாளர்கள் வெ.கொ.கருணாநிதி, இரா.முருகேசன், ஒன்றிய கழக பொறுப்பாளர் இரா.கென்னடி, மாவட்ட துணை செயலாளர்கள் மு.கணேசன், லதா பாலு, சி.சந்திரசேகரன், மாவட்ட பொருளாளர் கு.இராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் சி.ஆர். எம்.பொய்யாமொழி, ஆர்.எம்.அன்பழகன், இரா.பாலு, ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் பூ.செல்வராஜ், இரா.மணிமாறன், மா.அன்பழகன், ரெ.அசோகசக்ரவர்த்தி, ரெங்க.முருகன், கோ.அறிவழகன், ஆர்.கலியபெருமாள், வி.எழில்மாறன், இரா. அண்ணாதுரை, ப.தனவேல், தெய்வ.இளையராஜா, நா.கணேசன், பொன்.செல்வம்

,கே.ஜி.எஸ். முருகன், ஆர்.செந்தில்குமார், பெரம்பலூர் ஒன்றிய பொறுப்பாளர்கள் மதியழகன், சி.இராஜேந்திரன், நீலமேகம், பேரூர் செயலாளர் அல்போன்ஸ், பொதுக்குழு உறுப்பினர்கள் வி.எம்.ஷாஜகான்,

சுமதி கருணாநிதி, அரியலூர் நகர் மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், உடையார்பாளையம் பேரூராட்சி தலைவர் மலர்விழி ரஞ்சித்குமார், வரதராஜன்பேட்டை பேரூராட்சி தலைவர் மார்க்கிரேட் அல்போன்ஸ் ஆகியோர் முன்னிலை யில் அடிக்கல் நாட்டுவிழா நடைபெறுகிறது அது சமயம் மாநில,மாவட்ட, தலைமை செயற்குழு, பொதுக்குழு, ஒன்றிய,நகர, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக தோழர்கள், பொதுமக்கள் சுமார் 25,000 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.



கழகத் தலைவர் , முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் படி, கழக இளம் தலைவர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு, அரியலூர் மாவட்ட கழகத்தின் நீண்டநாள் கனவான 'கலைஞர் அறிவாலயம்' அடிக்கல் நாட்டு விழா எழுச்சியுடன் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் மண்டல பொறுப்பாளர் கே.என். நேரு பங்கேற்று, புதிய கட்டடப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டிச் சிறப்பித்தார். கழகத்தின் வளர்ச்சிக்கான இந்த வரலாற்று நிகழ்வில்,மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தொண்டர்கள் பெருந்திரளாகக் கலந்துகொண்டனர்.

### புதுவையில் 'பாண்லே' நிர்வாகச் சீர்கேட்டைக் கண்டித்து

# மாநில தி.மு.க. - தொ.மு.ச. பேரவை கண்டன ஆர்ப்பாட்டம்!

## எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா தலைமையில் 300 பேர் பங்கேற்பு!




புதுச்சேரி, டிச.10-

பாண்லே நிர்வாக சீர்கேட்டை கண்டித்து, புதுச்சேரி மாநில தி.மு.க. மற்றும் தொ.மு.ச. பேரவை சார்பில், மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் குருமாம்பேட் பாண்லே நிறுவனம் வாயில் முன்பு நேற்று காலை நடந்தது.

ஆர்ப்பாட்டத்திற்கு மாநில தொ.மு.ச. பேரவை அமைப்பாளர் அண்ணா அடைக்கலம் தலைமை வகித்தார். ஊசுடு தொகுதி செயலாளர் இளஞ்செழியப்பாண்டியன் வரவேற்று பேசினார்.

தொமுச தலைவர் அங்காளன், துணைத் தலைவர்கள் ராமகிருஷ்ணன், காயாரோகணம், துணை அமைப்பாளர்கள் சிவக்குமார், மிஷேல், கண்ணன், சீனுவாசன், இராஜேந்திரன், இரவி, கொளஞ்நாதன், பாண்லே தொமுச தலைவர் சண்முகம், செயலாளர் விஸ்வலிங்கம் ஆகியோர் வகித்தனர்.

இதில், திமுக மாநில அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா கலந்து கொண்டு, கண்டன உரை ஆற்றினார்.

தொடர்ந்து, மாநில துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி எம்.எல்.ஏ., பொருளாளர் இரா. செந்தில்குமார் எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத் எம்.எல்.ஏ., முன்னாள் நாம் தமிழர் கட்சி தமிழ் செல்வம் ஆகியோர் பேசினர்.

கண்டன ஆர்ப்பாட்டத்தில், கறவை மாடு வழங்கியதில் ஊழல், தீபாவளிக்கு 1.5 டன் பால் பொருட்கள் அன்பளிப்பு வழங்கியது, தேவைக்கு அதிகப்படியான ஆட்கள் இருந்தும் கொள்ளைப்புற ஆட்கள் திணிப்பு, தொழிலாளர்களின் வைப்பு நிதி ரூ. 20 கோடி கட்டாமல் இருப்பது, மேலாண் இயக்குநரின் திறமை யின்மையால் ஏற்பட்டுள்ள பல கோடி கடன் ஆகியவற்றை கண்டித்தும், திறமையான ஐ.ஏ.எஸ். அதிகாரியை கொண்டு மீண்டும் பாண்லே நிறுவனத்தை உயிர்ப்பிக்க வலியுறுத்தியும் கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

இந்த ஆர்ப்பாட்டத்தில், சட்டமன்ற உறுப்பினர் மூர்த்தி, மாநில துணை அமைப்பாளர் தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் லோகையன், அருட்செல்வி, தொகுதி பொறுப்பாளர்கள் டாக்டர் நித்திஷ், பசுபிக் சங்கர், பொதுக்குழு உறுப்பினர்கள் கோபால், கார்த்திகேயன், ராமசாமி, செல்வநாதன், பிரபாகரன், தங்கவேலு, தர்மராஜன், செந்தில்வேலன், பழநி, நர்கீஸ், தொகுதி செயலாளர்கள் நடராஜன், மணிகண்டன், சக்திவேல், தியாக ராஜன், ஆறுமுகம், வடிவேல், ராதாகிருஷ்ணன், கலைவாணன், அணிகளின் அமைப்பாளர்கள் மாணவர் அணி மணிமாறன், மகளிர் அணி காயத்ரி ஸ்ரீகாந்த், மகளிர் தொண்டர் அணி சுமதி, தொண்டர் அணி வீரன் (எ) விரய்யன், இலக்கிய அணி மோகன்தாசு, ஆதிதிராவிடர் நலக்குழு ஆறுமுகம், நெசவாளர் அணி செந்தில்முருகன், அமைப்பு சாரா ஓட்டுநர் அணி மதிமாறன்,

சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு முகம்மது ஹாலிது, மருத்துவர் அணி ஆனந்த் ஆரோக்கியராஜ், அணித் தலைவர்கள் வர்த்தகர் அணி செல்வமுத்துகுமார விநாயகம், துணைத் தலைவர்கள் ஆதிதிராவிடர் நலக்குழ கதிரவன், கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை ராஜேஷ் (எ) சேவியர் ராஜேஷ், வழக்கறிஞர் அணி தாமோதரன், ராமகிருஷ்ணன், துணை அமைப்பாளர்கள் புஷ்பமாலா, வலைதளப்பிரிவு புஷ்பலதா, கோபி, அன்பழகன், தேவேந்திரன், கண்ணன், பக்ருதீன், தாமரைக் கண்ணன், பிஆர்டிசி ராஜேந்திரன், சுரேஷ், சிவதாசன், பாலபாரதி, சக்திவேல், காளி உள்ளிட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட 300-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

பாண்லே தொ.மு.ச. பேரவை பொருளாளர் அன்பரசன் நன்றி கூறினார்.

### புதுடெல்லியில் — எஸ்.கே.ஹல்தார் தலைமையில்

# காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 46-வது கூட்டம்!

## காணொலியில் - தமிழ்நாடு நீர்வளத்துறை அரசு செயலாளர் ஜெ.ஜெயகாந்தன் ஐ.ஏ.எஸ். பங்கேற்பு!

புதுடெல்லி, டிச.10-

புதுடெல்லியில் நேற்று எஸ்.கே.ஹல்தார் தலைமையில் நடைபெற்ற காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 46-வது கூட்டத்தில், தமிழ்நாடு உறுப்பினர் மற்றும் அரசு செயலாளர், நீர்வளத்துறை ஜெ.ஜெயகாந்தன் மற்றும் இரா.சுப்பிரமணியன், தலைவர், காவிரி தொழில்நுட்பக் குழுமம் மற்றும் பன்மாநில நதிநீர்ப் பிரிவு ஆகியோர் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக கலந்து கொண்டார்கள்.

தமிழ்நாடு உறுப்பினர், தற்பொழுது (08.12.2025) மேட்டூர் அணையின் நீர் இருப்பு 87.554 டி.எம்.சி ஆக உள்ளது என்றும், அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 4,282 கன அடியாக உள்ளது என்றும் அணையிலிருந்து வினாடிக்கு 2,986 கன அடி நீர் விவசாயம், குடிநீர் மற்றும் தொழிற்சாலைப் பயன்பாட்டிற்காகத் திறந்துவிடப்படுகிறது என்றும் தெரிவித்தார்.

மேலும், காவிரி டெல்டா மாவட்டங்களில் நவம்பர் மாதம் கடைசி வாரத்திலும் மற்றும் டிசம்பர் மாதம் முதல் வாரத்திலும் டித்வா புயலினால் பெய்த கன மழை காரணமாக பயிர்ச் சேதம் ஏற்பட்டுள்ளதால், சேதம் ஏற்பட்ட பரப்பளவின் கணக்கெடுப்புப் பணி நடைபெற்று வருகிறது என்றும் தெரிவித்தார்.

கர்நாடக அணைகளின் நீர் இருப்பு மற்றும் நீர் வரத்து கணிசமான அளவு தொடர்ந்து வருவதினாலும், தமிழகத்திற்கு 2025, டிசம்பர் மாதத்திற்கு வழங்கப்பட வேண்டிய நீர் அளவான 7.35 டி.எம்.சி, நீரினை உச்சநீதிமன்ற ஆணையின் படி கர்நாடகம் பில்லி குண்டுலுவில் உறுதி செய்யுமாறு ஆணையத்தை வலியுறுத்தினார்.

கர்நாடகம், தொடர்ந்து காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பிலும் மற்றும் உச்சநீதிமன்றத் தீர்ப்பிலும் அங்கீகரிக்கப்படாத நீரேற்று பாசனத் திட்டங்களைச் செயல்படுத்தி சாகுபடி செய்வதைத் தடுக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், ஆணையம் இத்திட்ட விவரங்களை பெறவும் வலியுறுத்தினார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி


# "அன்னம் தரும் அமுதகரம்" 293 வது நாள்!


## அம்பத்தூர் தெற்குப் பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

*சென்னை, டிச.10-*

*முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 293 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (09.12.2025), அம்பத்தூர் தெற்கு பகுதி: 1) வட்டம் 87, வன்னியர் தெரு,*

*2) வட்டம் 89, இளங்கோ நகர், பூங்கா டிவிஎஸ் காலனி, மாமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அற நிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு*





*நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.*

*இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, டி.எஸ்.பி ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர் நாகராஜ், பி.கே.மூர்த்தி.எம்.சி, டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல் பி எஃப்.மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் என்ற நீலகண்டன் எம்.சி து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு. கிருஷ்ணமூர்த்தி அம்பத்தூர் தெற்கு/வடக்கு/ கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ.சேகர் எம்.சி, நா. நெப்போலியன், ஆர். டீக்கா, வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜயகுமார், த.வ.லால், பி.செந்தில். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.*



கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி மங்களூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு விலை இல்லா மிதிவண்டிகளை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வி.கணேசன் வழங்கினார். உடன் மங்களூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் பா. செங்குட்டுவன் உள்ளார்.